# தொடக்கப் பள்ளிகளுக்கான கல்விச்சேமிப்பு விருதுகள்

அன்பார்ந்த பெற்றோர்களே/பாதுகாவலர்களே,

சிங்கப்பூரரான எல்லாப் பிள்ளைகளுக்கும் வழங்கப்படும் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தவும், பள்ளியில் கல்வியிலும் பாடம் சாரா நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்க மாணவர்களை ஊக்குவிக்கவும் அரசாங்கம் ஆண்டுதோறும் கல்விச்சேமிப்பு விருதுகளை வழங்குகிறது. பின்வருவன கல்விச்சேமிப்பு விருதுகளுக்கான 3 பெரும் பிரிவுகள்:

(அ) நல்லொழுக்கத்திலும் விழுமியங்களிலும் உன்னத நிலை
- கல்விச்சேமிப்பு நல்லொழுக்க விருது

(ஆ) பாடம் சாரா நடவடிக்கைகளில் உன்னதச் சாதனை
- சாதனை, சிறந்த தலைமைத்துவம் சேவைக்கான கல்விச்சேமிப்பு விருதுகள் (ஈகள்ஸ்)

(இ) பாடம் சார்ந்த நடவடிக்கைகளில் உன்னத நிலை சாதனை
- கல்விச்சேமிப்பு உபகாரச்சம்பளம்
- கல்விச்சேமிப்புச் சிறப்பு உதவித்தொகை
- கல்விச்சேமிப்பு நல்ல முன்னேற்றத்திற்கான வெகுமதி

| விருதின் வகை | யாருக்கு? | எவ்வளவு? | அது எவ்வாறு அளிக்கப்படுகிறது? |
|---|---|---|---|
| கல்விச்சேமிப்பு நல்லொழுக்க விருது | நடத்தையிலும் செயலிலும் முன்மாதிரியான விழுமியங்களையும் தனிப்பட்ட பண்புகளையும் வெளிப்படுத்தும் மாணவர்கள். இது சிங்கப்பூர் மாணவர்களில் அதிகபட்சம் 2% மாணவர்களுக்கு வழங்கப்படும். | தொடக்கநிலை 1-3 - $200<br>தொடக்கநிலை 4-6 - $350 | தகுதியுள்ள பிள்ளைகளைப் பள்ளிகள் தெரிவுசெய்யும். விருதுபெறுபவர்களுக்கு அஞ்சல் வழியாக நவம்பர் மாத இறுதியில் தகவல் தெரிவிக்கப்படும். |
| சாதனை, சிறந்த தலைமைத்துவம் சேவைக்கான கல்விச்சேமிப்பு விருதுகள் (ஈகள்ஸ்) | தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்தும், சமூகத்துக்கும் பள்ளிகளுக்கும் நல்ல சேவை ஆற்றும், பாடம் சாரா நடவடிக்கைகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள். மாணவர்கள் பள்ளித் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதோடு நன்னடத்தை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இது சிங்கப்பூர் மாணவர்களில் அதிகபட்சம் 10% மாணவர்களுக்கு வழங்கப்படும். | தொடக்கநிலை 4-6 - $250 | தகுதியுள்ள பிள்ளைகளைப் பள்ளிகள் தெரிவு செய்யும். விருதுபெறுபவர்களுக்கு அஞ்சல் வழியாக நவம்பர் மாத இறுதியில் தகவல் தெரிவிக்கப்படும். |
| கல்விச்சேமிப்பு உபகாரச்சம்பளம் | ஒவ்வொரு நிலையிலும் நன்கு தேர்ச்சி பெற்ற, நன்னடத்தை உடைய முதல் 10% மாணவர்கள். | தொடக்கநிலை 5-6 - $350 | உபகாரச்சம்பளத்திற்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கு அஞ்சல் வழியாக நவம்பர் மாத இறுதியில் தகவல் தெரிவிக்கப்படும். |
| கல்விச்சேமிப்புச் சிறப்பு உதவித்தொகை | ஒவ்வொரு நிலையிலும் கல்வியில் முதல் 25%க்குள் வருவதோடு நல்ல நடத்தையும் மாதமொன்றுக்கு $5,000க்கும் குறைவான மொத்தக் குடும்ப வருமானமும் (அல்லது $1,250க்கும் குறைவான தனிநபர் சராசரி வருமானம்) உள்ள மாணவர்கள். | தொடக்கநிலை 1-3 - $200<br>தொடக்கநிலை 4-6 - $250 | • தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அஞ்சல் வழியாக நவம்பர் இறுதியில் விண்ணப்பப் படிவத்தைப் பெறுவார்கள்.<br>• உங்கள் குடும்ப வருமானம் $5,000க்கும் குறைவாக இருந்தால் (அல்லது தனிநபர் சராசரி வருமானம் $1,250க்கும் குறைவாக இருந்தால்), நீங்கள் விண்ணப்பப் படிவத்தை நிறைவுசெய்து, அதனை டிசம்பர் மாதத் தொடக்கத்தில், உங்கள் வீட்டின் அருகே உள்ள சமூக நிலையத்தில்/மன்றத்தில் ஒப்படைக்கவும்.<br>• வெற்றிபெற்ற விண்ணப்பதாரர்களுக்கு டிசம்பரில்/ஜனவரியில் அஞ்சல் வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும். |
| கல்விச்சேமிப்பு நல்ல முன்னேற்றத்திற்கான வெகுமதி | முதல் 10%க்குள் இருப்பவர்களில் தரநிலையில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதுடன் நல்ல நடத்தையும் உள்ள மாணவர்கள். | தொடக்கநிலை 2-3 - $100<br>தொடக்கநிலை 4-6 - $150 | வெகுமதிக்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கு அஞ்சல் வழியாக டிசம்பர் மாதத் தொடக்கத்தில் தகவல் தெரிவிக்கப்படும். |

உங்கள் மகன்/மகள் கல்வியிலும் பாடம் சாரா நடவடிக்கைகளிலும் வெற்றிபெற எங்கள் வாழ்த்துகள்.